# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590


**ஆணை நாள் – 04.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12292/D/2019**

திரு. ஆ. முத்தையன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / தலைமையாசிரியர்,
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, சின்ன சேலம், -- பொது அதிகார அமைப்பு
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 03.09.2019 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 04.10.2019 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 25.10.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 03.12.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (04.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை. பொதுத் தகவல் அலுவலர் திருமதி. செந்தில்நாயகி, தலைமையாசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, சின்ன சேலம், கள்ளக்குறிச்சி மாவட்டம் இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் விழுப்புரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், சின்னசேலம் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மொத்தம் எத்தனை மாணவியர்கள் பாடம் பயில்கிறார்கள் என்பது பற்றிய வகுப்பு வாரியான விவரம் மற்றும் பிரிவு வாரியான விவரம், இப்பள்ளியில்

பயிலும் மாணவியர்களின் பெயர்கள் மற்றும் மாணவியர்களின் தந்தை பெயர் விவரம், இப்பள்ளியில் ஆங்கில வழியில் பாடம் பயின்று வரும் மாணவியர்களின் விவரம், இப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களின் முழு விவரம், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தேர்வு கட்டணம் பற்றிய முழு விவரம், தேர்வுக்கட்டணம் வசூல் செய்வதற்கென்று தமிழக அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பின் அவற்றின் நகல், இப்பள்ளியில் 135 ரூபாய் பணம் வாங்கியது குறித்து ஆதாரபூர்வமாக நிருபிக்கப்பட்டால் உரிய ஆசிரியர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கையின் விவரம், மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளதா என்ற விவரம், இதன்மூலம் பயனடைந்தவர்களின் முழு விவரம் உள்ளிட்ட விவரங்களை மொத்தம் 10 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (04.11.2020) தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டதாக தெரிவித்தார். மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரை தொடர்பு கொள்ள இயலாத நிலையில், பொதுத் தகவல் அலுவலரின் விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, மனுதாரருக்கு பொது அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட தகவல்கள் போதுமானவை என்று முடிவு செய்து, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12292/D/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் / தலைமையாசிரியர்,
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, சின்ன சேலம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு. ஆ. முத்தையன், த/பெ. ஆறுமுகம்,
எண்.4/2, போயர் தெரு, கடைவீதி,
சின்னசேலம் (PO & TK),
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

Copy to: File
SNPA 06.11.2020